நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

[illegible] 2] சென்னை: மாசி 7உ சனி (19—2—55) ★ ★ வெளியூர்: மாசி 8உ ஞாயிறு (20—2—55) [இதழ் 213

'ஜோடி' சேர, மணம் முடிக்க மாநாடு!

நாகபுரி, பிப். 19—

மணமாக வேண்டிய பெண்கள், இளைஞர்கள், இவர்களின் பாதுகாப்பாளர்கள் ஆகியோரடங்கிய மாநாடுகளை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கூட்டுவதின் மூலம் பெரும் அளவில் 'ஜோடி' சேர்க்கலாம் என்பதாக, இங்குள்ள சில சமூக சீர்திருத்தவாதிகள் திட்டமிட்டு வருகின்றனராம்.

அத்தகைய மாநாடுகளில் மணப்பெண்களும் ஆண்களும் சந்தித்து தங்களுக்குப் பிடித்தமானவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமெனக் கூறப்படுகிறது.

இந்த முறையினால் பெற்றோரின் கவலை குறைவதுடன் வீண் செலவும் தவிர்க்கப்பட முடியும் என்று எதிர்பார்ப்பதாயும் அந்த சமூக சேவகர்கள் எண்ணுகின்றனராம்.

காங்கிரஸ் பேசும் சோஷலிச மாதிரியின் போலித்தன்மை!

'மக்களிடை அறிவுக் குழப்பத்தை உண்டாக்கவே இந்தச் சதி!

'கையாலாகாதவர்கள் கவர்னர்கள்'

கிருபளானியின் கண்டனமாரி

கான்பூர், பிப். 19—

"தேர்தல் காலத்தில் மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தவும், அவர்களைத் தவறான பாதையில் அழைத்துச் செல்லவுமே, காங்கிரஸ், 'சோஷலிச மாதிரி சமுதாயம்' பற்றிப் பேசுகிறது," என்று இங்கு நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் பேசுகையில் ஆச்சாரியா கிருபளானி கூறியுள்ளார்.

"மக்களிடையே வருமானத்திற்கு ஒரு அதிகபட்ச எல்லையை நிர்ணயித்து, மாநிலங்களில் கவர்னர் பதவியை ஒழித்துவிட்டு, சோஷலிச மாதிரி சமுதாயத்தை அமைக்கக் காங்கிரஸ் விரும்பினால், தனக்கும் காங்கிரசுக்கும் வேறுபாடு எதும் இருக்காது" என்று அவர் மேலும் கூறினார்.

"இந்தியாவின் முன்னேற்றத்திற்கு கவர்னர்கள் உருப்படியாக எதையும் செய்ய முடியாதவர்கள்."

"'சுதந்திரமடைந்த பிறகு நாடு மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது,' என்று கூறுபவர்கள் மக்களை தவறான பாதை நோக்கி அழைத்துச் செல்பவர்களாவார்கள்," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

"நாடு, உண்மையில் முன்னேற்றமடைந்திருக்கிறது என்றால், இங்கே லஞ்சமும், கள்ளமார்க்கெட்டும் ஏன் தலைவிரித்தாடுகின்றன?" என்று அவர் கேட்டார்.

"சுதந்திரம் வந்த பிறகு நாட்டில் உணவுப் பொருள்களின் விலைகள் குறைந்துபோயிருக்கவில்லை என்றும், பொருளாதாரச் சுமையிலிருந்து சாதாரண மனிதன் விடுபட்டதாகத் தெரியவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

நாகர்கள் மீது போலீசார் சுட்டனர்

மணிப்பூரில் பார்லிமெண்டரி அரசு வேண்டுமென்று கோரி நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றவண்ணம் இருக்கிறது.

உக்ருசி என்னுமிடத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது போலீசார் சுட்டதில் ஒரு பெண் உள்பட ஐந்து நாகர்கள் காயமுற்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், சப்-டிவிஷனல் அதிகாரியின் அலுவலகத்தைத் தாக்கி அவரைக் கடத்திச் செல்ல முயன்றார்கள் என்று போலீசார் கூறுகின்றனர்.

பாதுகாப்புச் செலவு குறைகிறது

பிரிட்டன் தனது பாதுகாப்புச் செலவுகளுக்காக 1955—56-வது நிதி ஆண்டில் 153 கோடியே 72 லட்சம் பவுன் ஒதுக்கும்.

இந்தத் தொகை நடப்பு நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளதைவிட 10 கோடியே 22 லட்சம் பவுன் குறைவானதேயாகும்.

அதுபோலவே, இராணுவத்திலும் புது ஆண்டில் 7,33,000 பேர்தான் இருப்பர். முன் இருந்த எண்ணிக்கையைக் காட்டிலும் இது 35,300 குறைவாகும்.

கோவாவில் 150-பேர் கைது

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலி

பெல்காம், பிப், 19—

'டாக்டர் கைதான்டே தின'க் கொண்டாட்டத்தின் போது, கோவா முழுமையும் 150 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கார்வார்—கோவா எல்லையில் கோவா இராணுவம் நிற்கிறதாம்; அதேபோல் கிராமங்களில் மக்கள் எழுச்சி ஏற்பட்டால் அதைத் தடுக்க கிராமப்புறங்களுக்கும் இராணுவம் அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

புதன் கிழமையன்று சாசல் ரயில் நிலையத்தில் தண்டவாளத்தின் மீது உட்கார்ந்து, கோவாவுக்கும்—இந்தியாவுக்கும் இடையே ரயில் போக்குவரத்தைத் தடுத்துக் கொண்டிருந்தவர்களை இந்தியப் போலீசார் கைது செய்து அவர்களை பெல்காமில் கொண்டுவந்து விடுதலை செய்துவிட்டனர்.

கனகோன என்னுமிடத்தில் கோவா போலீசார் கைது செய்த 14 தொண்டர்களையும், மார்கோவா சிறைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கானகோனவில் சீட்டாடிக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தினரை கோவா இராணுவப் போலீசார், 'சத்தியாக்கிரகிகள்' என்று நினைத்து அவர்களில் ஒருவரை சுட்டுத்தள்ளிவிட்டனர்.

சீட்டாடிக் கொண்டிருந்தவர்கள், இராணுவப் போலீசார் வருவதைக் கண்டதும், பயந்துகொண்டு ஓடினார்களாம்.

போர்த்துகீசிய சிப்பாய்கள், ஓடியவர்களை நிற்குமாறு கூறியும் கேளாது போகவே, அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

இந்தியாவில், 1954-ம் ஆண்டில், மொத்தம் 3,33,313 சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இது முந்திய வருடத்திய உற்பத்தியை விட 74,000 சைக்கிள்கள் அதிகம்.

தூய ஆடை உடுத்திய 'அரிசன்' அடிக்கப்பட்டார்

நகைகள் அணிந்த அவர் மனைவியும் தாக்கப்பட்டார்

அகமதாபாத், பிப். 18—

தூய ஆடை உடுத்தியதற்காக பனஸ்கந்தா கிராமத்தைச் சேர்ந்த ஒரு 'அரிஜன'னும், ஜாதி இந்துக்களைப் போன்று நகைகளை அணிந்துகொண்டதற்காக அவர் மனைவியும், உயர் ஜாதி இந்துக்களால் தாக்கப்பட்ட கொடுஞ் செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வரிஜனின் பெயர் சர்கான் கான என்பதாகும். அவர் ஒரு மாவட்டக் கழக உறுப்பினர்.

கிராம நாட்டாண்மைக்காரர் இருவர், அவரை ஒருநாள் அழைத்து, அவரும், அவர் மனைவியும் ஏன் ஜாதி இந்துக்கள்போல் தூய ஆடையும், நகைகளும் அணிந்துகொண்டார்கள் எனக் கேட்டனர்.

'இக்காலத்தில் அனைவரும் சமம்' என அவர் பதில் கூறினது கேட்டு, ஆத்திரங்கொண்டு அந் நாட்டாண்மைக்காரர்கள், அவ்வரிசன கணவன், மனைவியைத் தடிகொண்டு நையப் புடைத்தனர்.

சேரியிலிருந்த மற்றவர்கள் குறுக்கிட்டு, மேற்படி அரிசனை பழையபடி மற்ற அரிசனங்களைப் போல் நடந்துகொள்ளச் செய்கிறோம் என வாக்களித்ததின் பேரில், அவர்களை மேலும் அடிக்காது விட்டனர் அந்த இரு உயர் ஜாதி வெறியர்களும்!

போலீஸ், அக்கொடியவர்களைக் கைது செய்துள்ளதாம்.

'நீதி' பேசுகிறது!

✶

கொலம்பியா, பிப். 18—

பஸ்களிலும் வெள்ளையர்—கறுப்பர் என்ற நிறபேதம் காட்டப்படுவதை ஆட்சேபித்து நீக்ரோ மாது ஒருவர், பஸ் கம்பெனி ஒன்றின் மீது 25,000 ஸ்டர்லிங்கிற்கு மான நஷ்டஈடு கேட்டு வழக்குப் பதிவு செய்திருந்தார். அவர், தாம் ஏறிச் சென்ற பஸ்ஸில் நீக்ரோக்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் அந்த பஸ் டிரைவர் நிர்ப்பந்தப்படுத்தி தம்மை உட்காரவைத்ததாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இவரது வழக்கை விசாரித்த சமஷ்டி மாவட்ட நீதிபதி, மனுவை நிராகரித்து, "பள்ளிக்கூடங்களில் தான் இன ஒதுக்கல் சட்ட விரோதமானதாகுமென்று தலைமை உயர்நீதி மன்றம (சுப்ரீம் கோர்ட்) தீர்ப்பளித்துள்ளதே தவிர பஸ்களில் அல்ல," என்று கூறினார்.

சதி குற்றத்தை கண்டறியும் முயற்சி

போலீசுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு இல்லையாம்!

ஜெய்ப்பூர், பிப். 18—

அக்டோபரில் ஜோட்பூரில் நடைபெற்ற உடன்கட்டை ஏறும் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் குறித்து விவரம் அறியும் முயற்சியில், பொது மக்கள் ஒத்துழைப்பு போதிய அளவில் போலீசுக்குக் கிடைக்கவில்லை எனவும், அதன் விளைவாகவே பிரஸ்தாப வழக்கில் தாமதம் ஏற்பட்டு இருக்கிறது எனவும், உள்நாட்டு அமைச்சர் ராம் கிஷோர் வியாஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள காட்சிகள், தங்களுக்குள்ள மதநம்பிக்கையின் காரணமாக, உண்மையைக் கூறத் தயங்குகின்றனர் எனவும், அதனாலேயே போலீசின் முயற்சி குந்தகப்படுகிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சதி மேடையில் நடைபெறும் மதக் கூட்டங்கள் நடைபெற ஒட்டாமல் தடுக்கப்பட்டிருப்பதாகவும், உடன்கட்டை ஏறுவதை சிறப்பித்துக் கூறும் நூற்களைத் தடுக்க வேண்டும் என்ற யோசனையைக் கவனிப்பதாகவும் அந்த அமைச்சர் அறிவித்தார்.

காந்தியார் சமாதியின் முன் உண்ணாவிரதம்!

இராசேந்திர பிரசாத் போக்குக்கு எதிர்ப்பு

விந்தியப் பிரதேச சட்டசபை எதிர்க் கட்சித் தலைவரான சந்திர பிரதாப் தைவாரி என்பவரும், யமுனா பிரசாத் சாஸ்திரி என்பவரும், காந்தியாரின் சமாதி இருக்குமிடமான 'ராஜ் கட்'த்தில் 21 நாள் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தனர்.

விந்தியப் பிரதேச சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் நில வரி, குடிஉரிமை மசோதாவை எதிர்த்து ஜனாதிபதியைப் பேட்டி காண சந்திர பிரதாப் தலைமையில் தூதுக் குழு ஒன்று புது டில்லிக்கு வந்ததாம்; ஜனாதிபதி இந்தத் தூதுக் குழுவைக் காண மறுத்துவிட்டதால் ஜனாதிபதியின் இப்போக்கை எதிர்த்து இவர்கள் காந்தியாரின் சமாதியின் முன்பு உண்ணாவிரதமிருக்கத் துவங்கினர்.

மனைவியின் 'வாக்கு' - மணாளனுக்கா? மகனுக்கா?

"என் மகனை எதிர்க்கவில்லை!"

"கம்யூனிசத்தை எதிர்த்தே போரிடுகிறேன்!"

கர்நூல், பிப். 19—

ஆந்திரத் தேர்தலில் நிகழ்ந்துள்ள அற்புதங்கள் பல; கணவனை எதிர்த்து மனைவியும், தனயனை எதிர்த்துத் தந்தையும் இரண்டொரு தொகுதியில் போட்டி நடைபெறுகின்றன.

கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள திருவூர் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் பி. பாப்பையா அபேட்சகராக நிற்கிறார்; அவரை எதிர்த்து, கம்யூனிஸ்டு அபேட்சகராக அவருடைய மகன் பி. இராம ராவ் போட்டியிடுகிறார்.

தன் மணவாளருக்கு வாக்களிப்பதா?—மகனுக்கு வாக்களிப்பதா என்ற குழப்பம் தோழியர் பாப்பையாவிற்கு ஏற்படாமல் இருக்க முடியாது; தெளிவு பெற முடியாத அம்மையார், தனது உரிமையை நிறைவேற்றாமல் இருந்துவிட்டார்களாம்.

சென்ற பொதுத் தேர்தலும், இப்பொழுது போலத்தான், இந்தத் தகப்பனும் - மகனும் தேர்தலில் ஒருவருக்கு எதிராக ஒருவர் போட்டியிட்டார்கள்; ஆனால், தந்தையைத் தோற்கடித்துவிட்டார் தனயன்! இந்தத் தேர்தல் முடிவு யாருக்குச் சாதகமாக முடிய இருக்கிறதோ?

'பெற்றெடுத்த மகனுக்கு எதிராகவே போட்டியிடுகிறோமே,' என்ற கவலை, பாப்பையாவிற்கு இருந்தபோதிலும், 'நான், என் மகனை எதிர்க்கவில்லை — கம்யூனிசத்தை எதிர்த்தே போரிடுகிறேன்,' எனக் கூறிக்கொள்வதில் மன நிம்மதி பெறப் பார்க்கிறார், அவர்!

நம் நாடு
தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 18—2—1955 வெள்ளி

நெசவாளர் கோரிக்கை!

'செய்யுந் தொழிலெல்லாம் நெய்யுந் தொழிலுக்கு ஈடாகாது,' என்று பெருமை பெற்ற கைத்தறி நெசவுத் தொழில் அவ்வப்போது சீரழிவதும், மீண்டும் செப்பனிடப்படுவதுமாக நிலையற்று இருந்து வருகிறது.

இரண்டாவது உலக யுத்த முடிவிற்குப் பிறகு, அதுவும் காங்கிரஸ் கட்சியினர் ஆளவந்தார்களான பிறகு, கைத்தறி நெசவுத் தொழில் பெரும் நெருக்கடிக்கு ஆளாகி வந்துள்ளது. சென்ற ஆண்டில்—ஆச்சாரியார் ஆட்சியில் அமர்ந்திருந்த காலத்தில் இந்த நெருக்கடி உச்சம் பெற்று, நெசவாளர் சமுதாயம் நினைக்கவும் நெஞ்சுவேகும் வேதனைகளுக்கு ஆளானதும் நாடறிந்ததே!

நெசவாளருக்கு ஏற்பட்டிருந்த அந்த நெருக்கடியான நிலையை தற்காலிகமாக மாற்றுவதற்கு தி. மு. கழகம், நாடு முழுவதும்-நகரங்கள் தோறும், தெருவெல்லாம், 'செந்தமிழ் நாட்டு கைத்தறி நெசவுச் சேலை—வேட்டி வாங்குவீர்' என்று, தோளில் துணியைத் தூக்கிக் கூவி விற்று, விற்பனையாகாமல் தேங்கிக்கிடந்த கைத்தறிக்கு ஆதரவு திரட்டும் பணியினை, மாற்றாரும் பாராட்டும் வகையில் செய்தது.

இன்றும் தொடர்ந்து, மக்களிடையே கைத்தறி ஆடைகளையே அணிய வேண்டியதின் அவசியம் குறித்து சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் வலியுறுத்தி எடுத்துக்காட்டி வருகிறது.

இந்த நமது பணியின் பலனாக, வாழ்விழந்து, வீட்டை விட்டு வெளியேறி, மனைவி மக்களுடன் 'நடுத் தெரு நாராயணன்'களாய் தவித்துக்கொண்டிருந்த நெசவாளத் தோழர்கள் வீடு திரும்பி, செய்யும் வேலைக்கு ஓரளவேனும் கூலியும் பெற்று, 'வாழ' முற்பட்டிருக்கின்றனர். ஆனாலும், அவர்களுக்கு 'வாழ்வு' தரப்பட்டுவிட்டது எனக்கொள்ள முடியாது; ஏனெனில், எந்த நிமிடமும் அவர்கள் தொழிலுக்கு நெருக்கடி ஏற்படலாம்.

ஆச்சாரியார் ஆட்சியிலிருந்த போது, 'வேட்டி, துவாலை, கலர் சேலை போன்றவற்றின் உற்பத்தியை கைத்தறி நெசவுக்கே ஒதுக்க வேண்டும்; ஆலைகளுக்கு அவற்றை உற்பத்தி செய்ய அனுமதிக்கக் கூடாது' என்று, சென்னை சட்டசபையில் எல்லாக் கட்சியினரும் ஒருமுகமாக ஆதரித்த தீர்மானமொன்றை நிறைவேற்றி தனது 'எஜமானர்'களான வட நாட்டு ஆட்சியாளருக்கு அனுப்பி வைத்தார்; பலன், தீர்மானம் எந்தக் குப்பைத் தொட்டியிலிருக்கிறதோ!

ஆனாலும், மத்திய அரசாங்கம், கைத்தறி நெசவுத் தொழில் பற்றி ஆராய 'கனுங்கோ விசாரணைக் குழு'வினை நியமனம் செய்தனர். குழுவும் விசாரித்து, தனது அறிக்கையை சில சிபாரிசுகளுடன் வெளியிட்டுள்ளது.

அந்த சிபாரிசுகளில், 'இப்போதுள்ள கைத்தறிகளை எல்லாம் படிப்படியாக விசைத்தறிகளாக மாற்றிவிட வேண்டும்,' என்பதும் ஒன்று.

'இந்தச் சிபாரிசு அமுல்செய்யப்படுமானால், இன்னும் 20 ஆண்டில் கைத்தறித் தொழிலே செத்துமடிந்துவிடும்; எனவே, இதனை அமுல் செய்யக் கூடாது' என்று மத்திய அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்து, சேலம்—திருச்செங்கோட்டில் சென்ற வாரம் நடைபெற்ற சென்னை மாநில கைத்தறி நெசவாளர் மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

கனுங்கோ குழுவின் சிபாரிசு எவ்வளவு நியாயமானது—இன்றுள்ள நாட்டின் அரசியல், பொருளாதார சூழ்நிலைக்கு உகந்ததுதானா— என்பதில், நிரம்ப வேறுபாடுகள் கொண்ட கருத்துக்கள் நாட்டில் நிலவுகின்றன. 'குழுவின் சிபாரிசு உடனடியாக அமுல் செய்யப்படக்கூடாது,' என்று, கைத்தறி நெசவாளர் கூறுவதில் நியாயமிருக்கத்தான் செய்கிறது.

தொல்லைகளின் எல்லையைத் தொட்டுவிட்டு, இப்போது தான் இல்லம் திரும்பி, வயிறார இல்லாவிடினும் ஒரு வேளையாவது உண்டு வாழ்கிறோம் என்ற பெயரில் வாழ்நாளைக் கழித்துக்கொண்டிருக்கிறார்கள் நெசவாளர்கள். சென்ற இரண்டு ஆண்டுகட்குமுன் குமுறத் தொடங்கிய அவர்களது வேதனை நிரம்பிய நெஞ்சம் வெடிக்கத்தான் இல்லையே தவிர, இப்போதுகூட அடங்கிவிட்டது என்று கூறிவிட முடியாது.

அந்த நிலையில் அவர்களது வேண்டுகோளை மத்திய அரசாங்கம் செவிமடுக்க வேண்டுவது அவசியமாகும்.

இரண்டாவதாக, 'சேலை, வேட்டி நெய்வதை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும்.' என்ற சென்னை சட்டசபையின் ஒருமுகக் குரலை, மத்திய அரசாங்கம் அமுல் நடத்த முன்வரவேண்டும் என்றும் அந்த நெசவாளர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

மதுக்கடையைத் திறந்து வைத்துக்கொண்டு மதுவிலக்குப் பிரச்சாரம் எப்படிப் பயன் தராதோ அப்படித்தான் அலங்காரமான ஆலைத் துணிகளை 'அழகுக்கு அழகு செய்யும் இவை' என்ற விளம்பரத்துடன் அணிஅணியாகக் குவித்து வைத்துக்கொண்டு, 'அந்த வண்ணப் பூ போட்டதை கண்ணாலும் பாராதே; இந்த வறியவன் நெய்த கைத்தறித் துணியைப் பார்' என்று கூறுவது கைத்தறித் தொழில் வளர பயன்தராது.

இப்போது கைத்தறி ஆடைகள் ஓரளவு ஆதரிக்கப்படுவதற்கு க்காரணம், நமது பிரச்சாரமும், மக்களின் இரக்க சிந்தையும், ஆலைத் துணியிலிருந்துகைத்தறிக்குத் தரப்படும் உபரித் தொகையும்தான்!

மக்களின் இரக்க சிந்தையோ அல்லது ஆலைத் துணியினின்றும் கிடைக்கும் உபரித் தொகையோ தேயுந் தன்மையனவேயன்றி, வளரும் தன்மையன அல்ல; ஆகவே, மத்திய அரசாங்கம் உடனடியாக சேலை, வேட்டி நெய்வதை ஒரு சில ஆண்டு காலத்திற்காவது கைத்தறிக்கே ஒதுக்க முன்வர வேண்டும்.

அதைப்போலவே, கனுங்கோ குழுவின் சிபாரிசில் உள்ள நியாய — அநியாயங்களை ஆராய்ந்து அமுல் செய்வதை இன்னும் சில ஆண்டுகளாவது ஒத்திப்போட வேண்டும்.

இந்த தற்காலிக நிவாரணத்தை மட்டும்தான் திராவிட நெசவாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

உற்பத்தி பெருக-வேலை வசதி கிடைக்க!

மத்திய மந்திரி கூறும் வழி

பம்பாய், பிப். 16—

இந்தியாவில் மேலும் மேலும் உற்பத்தி பெருகவும், அதிக வேலை வசதி கிடைக்கவும், தொழில் துறையில் நான்கு முனைகளில் (கன ரகத் தொழில், மத்திய ரகத் தொழில், சிறிய ரகத் தொழில், குடிசைத் தொழில்) தீவிர திட்டங்கள் வகுக்கப்படும் என்று மத்திய சர்க்கார் உற்பத்தி மந்திரி கே. சி ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

மத்தியப் பிரதேசத்தில் ரஷ்யக் கம்பெனியின் உதவியால் நிறுவப்படும் உருக்குத் தொழிற்சாலையில், 10 லட்சம் டன் உருக்கு உற்பத்தியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் கம்பெனி உதவியுடன் இன்னுமொரு உருக்கு ஆலையை பீகார் அல்லது மேற்கு வங்கத்தில் அமைக்கும் திட்டம் இருப்பதாயும், பிரிட்டிஷ் தூதுக் குழு வந்தபின் இதுபற்றி முடிவெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னை மாநிலத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை பயன்படுத்த ஒரு பரீட்சார்த்த இரும்பு உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

புதிய எண்ணெய் வயல்கள்

அசாமில் கண்டுபிடிப்பு

பம்பாய், பிப். 16—

அசாம் மாநிலத்தில் புதிய எண்ணெய் வயல்கள் காணப்பட்டுள்ளதாகவும், அதனால் இந்தியாவுக்குத் தேவையான எண்ணெயில் சுமார் நாலில் ஒரு பங்கு கிடைக்கும் என்றும், மத்தியசர்க்கார் உற்பத்தி மந்திரி கே சி. ரெட்டி தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் பதவிக்கு லடாய்

விதர்ப்ப பிரதேச காங்கிரசில் கோஷ்டிச் சண்டை வலுக்கிறது

தேபரின் சமரச ஏற்பாடு முறிகிறது

நாகபுரி, பிப். 18—

விதர்ப்ப பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவிக்கு ஏகமனதாக நியமனம் செய்யப்பட்டுள்ள பிரிஜ்லால் பியானி என்ற மத்திய பிரதேச மாநில நிதி மந்திரியை எதிர்த்து, அந்தப் பிரதேசத்தின் முன்னாள் தலைவரான வாமண்ராவ் ஜோஷி என்பவர் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறாராம்.

பீரார் காங்கிரஸ் கட்சியில் போட்டி மனப்பான்மையும், பதவி வெறியும் கொண்ட பல கோஷ்டிகள் இயங்கி வருகின்றன.

இந்தக் கோஷ்டிச் சண்டையைத் தீர்த்து வைப்பதற்காக காங்கிரஸ் தலைவர் யூ. என். தேபர், செயலாளரான எஸ். என். அகர்வாலை அனுப்பி வைத்திருந்தார்; அவர், கடந்த பிப். 12-ந் தேதியன்று அகோலா எனுமிடத்தில் கட்சிக் கூட்டமொன்று கூட்டி, இப்போது தலைவராயிருக்கும் டாக்டர் ஜி. பி. கேட்கர் என்பவரை பியானிக்கு எதிராகப் போட்டியிட வேண்டாமென்று கூறி, சமரசம் செய்து வைத்துவிட்டு, பியானியை வரும் மார்ச் 6-ந் தேதிய கூட்டத்தில் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுப்பது என்று முடிவெடுத்திருந்தாராம்.

ஆனால், அந்த சமரசக் கூட்டத்திற்கு தான் வரவில்லை என்றும், எனவே ஏற்பாடு செய்யப்பட்ட சமரசம் தன்னைக் கட்டுப்படுத்தாது என்றும் கூறி, பியானியை எதிர்த்துப் போட்டியிடப் போவதாக ஜோஷி அறிவித்திருக்கிறாரெனச் செய்திகள் கூறுகின்றன.

கைத்தறி நெசவுத் தொழில் நிலை

சர்க்கார் அறிக்கை

கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்திக்கு 'செஸ்' நிதியிலிருந்து இந்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்ட தொகையைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டங்களினால் சென்னை மாநிலத்தில் கைத்தறி துணிகள் மாதாந்திர விற்பனை ரூ. 21 லட்சத்திலிருந்து ரூ 27 லட்சத்திற்கு அதிகரித்துள்ளது என்றும், அதே போல மாதாந்திர உற்பத்தியும் ரூ. 18 லட்சம் மதிப்பிலிருந்து ரூ 32 லட்சம் மதிப்புக்கு உயர்ந்தது என்றும், மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

கைத்தறி நெசவுத் தொழில் முன்னேற்றம் குறித்து விரிவானதொரு அறிக்கையை அவர் வெளியிட்டார்.

சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 200 பேருக்கும், அருப்புக்கோட்டை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 200 பேர்களுக்கும் குடியிருப்பு வீடுகள் அமைத்துத் தருவதற்கான திட்டமொன்றை சர்க்கார் பரிசீலித்து வருவதாகவும் மந்திரி தெரிவித்தார்.

மேலும் அவர், கைத்தறித் துணி தொழிலுக்கும், நெசவாளருக்கும் பயன் தரக்கூடிய பல திட்டங்களை சென்னை சர்க்கார் மேற்கொண்டிருக்கின்றனர்; அவற்றிற்கென ரூ. 121 லட்சத்திற்கு திட்டங்களை அனுமதித்துள்ளனர். இந்திய சர்க்கார் உதவிசெய்ய முன்வந்த காலத்தில் மாநில சர்க்கார் பல திட்டங்களை நிறைவேற்றவில்லையானாலும், பின்னர் பல திட்டங்கள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன என்றும் குறிப்பிட்டார்.

இந்தோ - பர்மா சாலை தடுக்கப்பட்டது

மணிப்பூர் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியின் விளைவு

"மணிப்பூர் மாநிலத்தில் ம. சோ கட்சியினர் பொறுப்பாட்சி கோரி நடத்திவரும் கிளர்ச்சியை ஒட்டி, பழங்குடி மக்கள் இப்போது போக்குவரத்துக்களை தடை செய்யும் நோக்குடன் இந்தோ—பர்மா சாலையில் மரங்களை வீழ்த்தியும், கற்களை பரப்பியும் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்," என்று மணிப்பூர் பிரதம நிர்வாக கமிஷனரான பி. சி. மாத்யூ தெரிவித்துள்ளார்.

சாலையில் உள்ள தடைகளை அகற்ற போலீஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டிருப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

7,000 சதுர மைல்களை சாம்பலாக்கும் நீர்வளிக்குண்டு!

"பிகினி தீவில் கடந்த 1954 மார்ச் திங்களில் வெடிக்கப்பட்டதைப் போன்ற நீர்வளிக்குண்டு, வேறு எங்காவது வீசப்பட்டால், 7,000 சதுர மைல் வரை சுற்றியுள்ள மக்கள் மடிந்து சாம்பலாவார்கள்," என்று அமெரிக்க அணுசக்திக் கமிஷன் தலைவர் லூயிஸ் டிரஸ் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"ரேடியக் கதிர் சாம்பல்கள், காற்றின் திசையைப் பொறுத்து 150 மைல் சுற்று எல்லைக்குள் இருக்கும் ஒவ்வொருவரையும், அவர்கள்சரியானபாதுகாப்புமுறைகளை எடுத்துக் கொள்ளாவிடில் கொன்றுவிடும்; சாம்பல் படாமல் இருப்பதற்கு ஒரு அறைக்குள் புகுந்து கொள்வதுதான் சிறந்த பாதுகாப்பாக அமையும் தேகத்தில் திறந்திருந்த எல்லா பாகங்களையும் கழுவி, உடனே ஆடைகளை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்றும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்க மக்களின் சொந்தப் பாதுகாப்புக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தெரிந்துகொள்வதற்காகவே இந்த அறிக்கை பிரசுரிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இந்தியாவில் உள்ள கிராம மக்களில் ஐந்து பேருக்கு ஒருவர் வீதம் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் வரம்புக்குள் கொண்டுவரப் பட்டிருக்கின்றனர்.

அண்மையில் புது டில்லியில் கையெழுத்தான இந்திய—சோவியத் ஒப்பந்தத்தின் கீழ், மத்திய பிரதேசத்தில் அமைக்கப்படவிருக்கும் இரும்பு—உருக்குத் தொழிற்சாலையின் ஆரம்ப உற்பத்தி சுமார் 7½ லட்சம் டன்னாக இருக்கும்.

கைத்தறி பற்றிய கனுங்கோ சிபாரிசு

அமுல் நடத்தக் கூடாதெனக் கோரிக்கை

தொழிலே நசிந்துவிடுமென நெசவாளர் மாநாட்டில் கண்டனம்

சேலம், பிப். 15—

"கைத்தறி நெசவுத் தொழிலையே நசித்துப்போகச் செய்யக் கூடியது கனுங்கோ அறிக்கையில் கண்டுள்ள சிபாரிசுகள்;

"கைத்தறிகளை எல்லாம் விசைத் தறிகளாக்க வேண்டும் என்ற அந்த கனுங்கோ சிபாரிசு அமுல் செய்யப்பட்டால் கைத்தறி நெசவாளர்களில் 90 சதவிகிதத்தினர் வேலையிழந்து தவிப்பர் — வாழ்விழப்பர்,"

என்று, சேலத்தில் கூடிய மாநில கைத்தறி நெசவாளர் மாநாட்டில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிறன்று திருநெல்வேலி வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் மாநாட்டிற்கு தலைமை வகித்தார். மாநாட்டினை பி. கக்கன் திறந்துவைத்தார்.

மாநாட்டில் கனுங்கோ அறிக்கையின் சிபாரிசுகளை அமுல் செய்யக்கூடாது என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

‘பேய், பூதம், பிசாசு’ பிடித்துள்ள சமூகத்தை சீர்திருத்தம் செய்வது சாமானியமான காரியமல்ல!

போராடியே வளர்ந்தது திராவிட முன்னேற்றக் கழகம்

பெங்களூர் சமூக சீர்திருத்த மாநாட்டில் முன்னணி வீரர்கள் விளக்கம்

கர்நாடக தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த மாநாடு பெங்களூர் பிளாக் பள்ளி மைதானத்தில் நடந்த 12—2—55 அன்று நடைபெற்றபோது தி. மு கழக முன்னணி வீரர்கள் கழகத் தின சமூக சீர்திருத்தக் கருத்துக்களை விளக்கி பல தலைப்புகளில் ஆற்றிய சொற்பொழிவுகளின் சாரம் கீழே தரப்படுகிறது :—

‘போராட்டம்’ எனும் தலைப்பில் தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் பேசுகையில், கூறிய தின் சாரமாவது :—

“ திராவிடர் இயக்கமே—குறிப் பாக தி. மு. கழகமே ஒரு போராட்ட இயக்கமாகும். இன் றைய திராவிடர் இயக்கத்தின் மூதாதைகள் — தென்னகத்திலே ஒரு சாரார் மட்டும் வாழ்வில் எல்லா இன்பங்களையும் பெற்று, ‘எவரினும் உயர்ந்தவர் நாம்’ என்ற இறுமாப்புடன் உழைக்காமலேயே வாழ்ந்து வருகின்ற நிலைமை மாறி, உழைப்பவர் வாழ்வில் இன்பம் மலர, ‘ உரிமைகள் உயர்ந்த வர்க்கே,’ என்ற நிலை நீங்கி, ‘எல் லோரும் சம உரிமையுடன் வாழ வேண்டும்,’ என்ற நிலையை உரு வாக்க — இயக்கம் கண்டனர் ; போராடிப் போராடி உரிமைகளை நிலைநாட்டினர்.

“இப்படி போராட்டத்திலேயே துவங்கிய இயக்கம் வளர்ந்து, தி. மு. கழகமாக உருவெடுத்துள்ள இன்றுவரையில் அதன் வரலாறு ஒரு போராட்ட சரிதமாகவே இருப்பதைக் காண முடியும். தி. மு. கழகம் தொடர்ந்து இடை விடாது போராட்டங்களை நடத் திக்கொண்டிருக்கும் ஒரு விடுதலை இயக்கம் என்பது நாடறிந்த ஒன் றாகும்.

“ அரசியல், பொருளாதாரத் துறைகளில் மட்டுமின்றி, சமுதா யத் துறையிலேயும் மாபெரும் மாற்றத்தைச் சாதிக்க தி. மு. கழகம் தொடர்ந்து போராடி வரு கிறது. சமூகத்தின் பழைய கோட் பாடுகள், அமைப்பு முறைகள் அடி யோடு மாற்றப்பட்டு புதியதோர் சமூகம் உருவாக வேண்டுமென விரும்புகிறது ; அதற்காகப் புதிய கருத்துக்களை, புத்தறிவுக் கருத்துக் களை மக்கள் உள்ளத்திலே ஏற்றி, பகுத்தறிவுப் பாதைக்கு அவர்களை அழைத்து வருவதற்காகப் போராடுகிறது. குறிப்பாகக் கூறி னால் ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவப் போராட்டத்தையே அது நடத்துகிறது. பழைமைக்கும் — புதுமைக்கும் போராட்டம் ; திரா விடரின் வாழ்வைப் பறிக் கும் பழையகால ஏற்பாடு களுக்கும் — திராவிடருக்கு இழந்த வாழ்வை மீட்டுத் தரும் பகுத்தறிவுக் கோட்பாடுகளுக்கும் போராட்டம் ; ஆரியத்திற்கும் திராவிடத்திற்கும் போராட்டம்.

“ இந்த மாபெரும் தத்துவப் போராட்டத்தில் தி. மு. கழகம் மகத்தான வெற்றிகளைப் பெற்றுள் ளது ; பழைமை தோற்றிருக்கிறது —புதுமை வென்றிருக்கிறது ; அணையப் போகும் விளக்கு சுடர் விடுவது போலத்தான், செத்து மடியவிருக்கும் பழைமை சில இடங்களில், கடந்த சில மாதங்க ளாகத் துடிப்புடன் உலவ ஆரம் பித்தது. அதனைச் சாகாமல் காப் பாற்ற பழைமை வெறியர்கள் முயற்சித்து முயற்சித்து முழுத் தோல்வி பெற்றுவருகிறார்கள்.”

★

அடுத்து தோழர் அ. பொன் னம்பலனார் அவர்கள் ‘பேய்—பூதம்—பிசாசு’ என்ற தலைப்பில் பேசினார். அவர் குறிப்பிட்டதின் சாரமாவது :—

“பேய், பூதம், பிசாசு இவை பற்றிய நினைப்பும் பயமும், இந்த நாட்டிலே ஆண்களைவிட பெண் களைத்தான் அதிகம் பிடித்தாட்டு கிறது. பெண்கள், பேய் பிடித்து விட்டதாக ஆடுவதையும், பின்னர், பேயோட்டுபவனை அழைத்து அடி யும் உதையும் தந்து, தலைமேல் அம்மிக் கல்லை ஏற்றி வைத்து, தூக்கிக் கொண்டே ஓடச்செய்து, ஊருக்கு அப்பால் கல்லை வீசி எறிந்துவிட்டு பேயோட்டப்படுவ தையும் காண்கிறோம் ; அதுவும் குறிப்பாக இந்த நாட்டுப் பெண் களை மட்டும்தான் இந்தப் பேய்—பூதம்—பிசாசு எல்லாம் பிடிக்கும் போலும்! இதற்குக் காரணமெல் லாம் பெண்களுக்குக் குறிப்பாக வும், பொதுவாக ஆண்களுக்கும் குழந்தை முதலே இந்த பேய் பிசாசுகளைப் பற்றிய எண் ணங்கள் ஊட்டப்படுவதுதான். தாய் தன் குழந்தைக்கு சோறூட்டுவாள் ; குழந்தை சாப் பிடாமல் அழுது அடம் பிடித்தால் உடனே, குழந்தையை ஓங்கி ஒரு அடி அடித்து, ‘ அதோ பார்—பூதம் வருகிறது ; இதோ பார்—சாப்பிடா விட்டால் பேயும் பிசாசும் உன்னை வந்து பிடித்துக் கொள்ளும் ; இதோ மூன்று கண்ணன், நான்கு தலையன் வருகிறான்,’ என்று பயங் காட்டி, குழந்தைக்குச் சோறூட் டுவதுடன் அக்குழந்தையின் உள் ளத்தில் பயத்தையும் ஊட்டிவிடு கிறாள் ; இப்படி வளர்கிற குழந்தைகள்—குறிப்பாகப் பெண் கள், நாளாவட்டத்தில், இருள் என்றாலே அச்சப்படுகிறார்கள் ; பயப்படுகிறார்கள். ‘ அரண்டவ னுக்கு இருண்டதெல்லாம் பேய்’ என்பார்கள் ; அதுபோல, தங்க ளுக்குப் பயமாயிருப்பதெல்லாம் பெண்களுக்கு பேயும், பூதமும், பிசாசுமாகி விடுகின்றன.

“ பேய் பிசாசு என்று பேசுகிற பெண்களைக் கூப்பிட்டு, ‘ அவற் றைப் பார்த்திர்களா ?’ என்றால், ‘ நான் பார்க்கவில்லை ; பக்கத்து வீட்டு பங்கஜம் பார்த்தாள்,’ என்று கூறுவார்கள் ; அந்த பங்கஜத்தைக் கேட்டால், ‘அடுத்த வீட்டு அல மேலு சொன்னள்,’ என்பார் ; அவரைக் கேட்டால், ‘ஆற்றங் கரையில் பேசிக்கொண்டார்கள்,’ என்பார் ; அப்படியே தப்பித் தவறி யாரையாவது வலியுறுத்திக் கேட்டால், ‘ அந்த மரத்தடியிலே இரவு ஏழு மணிக்கு, என்னவோ போல கறுப்பாக ஒன்று தெரிந் தது,’ என்பார்கள் ; ‘ எப்படி இருந்தது?’ என்று கேட்டால், ‘ இருட்டிலே தெரியவில்லை ; பயம் வேறு,’ என்பர். இதைத்தான் பாரதி சொன்னர்—‘ அஞ்சி அஞ் சிச் சாவார் ; இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே ; துஞ் சுது முகட்டில் என்பார்—இந்த மரத்தில் என்பார்—அந்தக் குளத் தில் என்பார்,’ — என்று ! இந்த எண்ணங்களுக்குக் காரணமே, இவர்கள் உள்ளத்திலே குடி யேறியிருக்கும் அச்சம், பயம் ஆகியவையே அன்றி வேறெதுவும் இல்லை.

“ பெண்களும், ஆண்களும் கல்வியறிவும், சிந்திக்கும் திறனும், நெஞ்சு உரமும் கொண்டவர்களா யிருந்தால், பேயும்—பூதமும்—பிசாசும் என்ற கற்பனை உருவங்கள் அவர்களை அணுகமாட்டாது.

“ பெண்கள், சமுதாயத்திலே ஆண்களைப்போலவே சகல உரிமை களையும் பெற்று வாழ வேண்டிய வர்கள்—வாழத் தகுதியுடையவர் கள் என்பதை நாடு உணர்ந்து, பெண்களுக்குக் கல்வி முன்னேற் றமும், அறிவு வளர்ச்சியும் கிடைக்க வசதி செய்தால், பெண் களைப் பிடித்தாட்ட பேயோ பிசாசோ வராது !”

★

அடுத்த தமிழாசிரியர் வெங்க டாசலனார் அவர்கள் சிறிது நேரம் பேசினார்.

★

பின்னர், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் பேசியதின் சாரமாவது :—

“ சமுதாயச் சீர்திருத்தம் என் பது எல்லோராலும் சாதித்து விடக்கூடிய சாதாரண காரிய மல்ல ; அந்த மகத்தான வேலை யைத்தான் திராவிடர் இயக்கம் கடந்த 30 ஆண்டு காலமாய் இந்த தென்னாட்டிலே எத்தனையோ எதிர்ப்புகளைத் தாங்கிக்கொண்டு செய்துவருகிறது.

“ சீர்திருத்தப் பணியினை மேற் கொண்டுள்ள தி. மு. கழகத்தவ ருக்கு இன்று நாடெங்கும் மகத் தான வரவேற்புக் கிடைக்கிறது ; ஆனால், இன்றைக்கு 25 ஆண்டு களுக்கு முன்னர் நிலைமை அது வல்லவே ! ‘ஆண்டவனைப் பழிப் பவர்கள்—மதத்தை இழிவுபடுத்து பவர்கள்—சாதிகளை, சம்பிரதாயங் களைக் கண்டிப்பவர்கள்—ஆஸ்தி கத்தை ஒழிப்பவர்கள்—நாஸ்திகர் கள்,’ என்று நம்மை இழித்தும் பழித்தும் பேசினர் ; கல்லடியும் சொல்லடியும் தந்தனர் — இந்த நாட்டிலுள்ள வைதீகபுரியினர் ; ஆனாலும், அத்தனை எதிர்ப்புகளை யும் தாங்கிக்கொண்டுதான், தொடர்ந்து, மக்களுக்கு பகுத் தறிவுப் பாதையைக் காட்டிவருகிறோம் நாம்.

“ ஒரு காலத்தில் பகுத்தறிவுக் கொள்கைகளை ஏற்றிருந்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர் கள்தான் ; ஆனால் இன்று, ‘தமி ழகத்தில் பெரும்பாலான மக்கள் பகுத்தறிவியக்கத்தை ஆத ரிப்பவர்கள்,’ என்ற நிலை பிறந் துள்ளது.

“இந்த நிலையை வளர்க்க எங்க ளால் எப்படி முடிந்தது ? தி. மு. கழகத்தில் என்ன பெரும் பணக் காரர்கள் உண்டா ? மிட்டா மிரா சுகள் உண்டா ? கிடையாதே ! மிகச் சாதாரணமானவர்களான எங்களால் இந்தக் காரியத்தைச் சாதிக்க முடிந்திருக்கிறதென்றால், அதற்குக் காரணம், எங்களது இடைவிடாத பணியும், எங்கள் கருத்துக்கள் நியாயத்தின்பாற் பட்டவை என்பதையும் தவிர வேறென்ன இருக்க முடியும் ?

“ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலக நாடுகளுக்கெல்லாம் நாகரீகம் கற்றுத் தந்தவர்களாய் உயர்ந்த வாழ்வு பெற்றிருந்த திரா விடர் இனம், இன்று ஒற்றுமை யற்று, எண்ணற்ற சாதிகளாய் பிரிந்து, வாழ்விழந்து, வறுமையும் பஞ்சமும் பிடித்தாட்டுற வகை யில் தாழ்ந்திருப்பானேன் ? — என்ற எண்ணம்தான், திராவிடர் இயக்கத்தின் சமூக சீர்திருத்தப் பணிக்குக் காரணமாகும்,” என்று கூறி, சுயமரியாதை இயக்கத்தின் சுருங்கிய சரிதத்தை எடுத்துக் காட்டி, எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம் நம் கழகம் என்பதைச் சுட்டிக் காட்டி, அந்தக் கழகத்தின் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை விளக்கி அரியதோர் உரை நிகழ்த் தினார்.

★

பின்னர், தோழர் க. அன்பழ கன் அவர்கள், ‘ கலையும் வாழ்வும்’ என்ற தலைப்பில், ஆற்றிய அரிய உரையின் சுருக்கமாவது :—

“ கலை ஒரு காலத்தில், ஒழுக்கத் திற்காக என்றும், பின்னர் கலை கலைக்காகவே என்றும், பின்னர், கலை மக்களுக்காகவே என்றும் கூறப்பட்டு வந்திருப்பதை நாம் காண்கிறோம்.

“ திராவிடர்கள் ஒரு காலத்தே கலைகள் பலவற்றில் சிறந்து விளங்கினர்கள் என்றும், ஓவிய மும்—சிற்பமும் —இசையும்—கூத் தும் அவர்களால் சிறப்பிக்கப் பட்ட கலைகள் என்றும் நமக்கு பழங்கால வரலாறுகள் கூறுகின்றன. திராவிடரின் அன் றைய கலைகள் வாழ்க்கைக்கு ஒத்தவையாக, அறிவு பூர்வமா னவையாக இருந்தன என்பதும் உண்மையாகும்.

“ உயர்ந்த கலைகளுடன் நல்ல வாழ்வும் பெற்றிருந்த திராவிடர் கள், இன்று வாழ்க்கையில் நலிவு மனம் கொண்டவர்களாக இருக் கிறார்கள். அவர்கள் போற்றி வளர்த்த கலைகள், இன்று மாற்றித் திரித்துவிடப்பட்டுள்ளன. இந்த மாற்றம்—இந்தத் தாழ்வும் திரா விடர்களின் வாழ்வில் எப்படி நிகழ்ந்தது ? ‘ ஆரியம் நுழைந்தது —திராவிடர் தாழ்ந்தனர்,’ என் பது வரலாறு கூறும் உண்மையா கும். திராவிடர் படிப்படியாய் வாழ்விழந்தனர் ; அவர்கள் போற்றி வளர்த்த கலைகளின் புகழ் மங்கிற்று ; மக்களின் உள்ளத்தில் மதக் கருத்துக்கள் துவப்பட்டன.

“ இன்று அந்த நிலைமையை மாற்றி மீண்டும் திராவிடர்களுக்கு நல்வாழ்வு வேண்டும் என்பதற் காகத்தான் தி. மு. கழகம் பாடுபடு கிறது.”

‘ திராவிடர்களின் கலை—அறி வோடு வளர்ந்த கலை ; ஆரியக் கலை —அறிவைவிட்டு விலகிய கலை ; திராவிடரின் கலை—வாழ்வுக் கலை ; ஆரியக் கலை—வாழ்வைவிட்டு விலகிய கலை,’ என்பதை ஆதாரங் களுடன் விளக்கிய தோழர் அன் பழகன், ஆரியக் கலைகள் எப்படி எல்லாம் இன்று நாட்டில் நடமாடு கின்றன என்பதைச்சுட்டிக்காட்டி, அந்த கலைகளை வெறுத்தொதுக்கி விட்டு, கலைகளிலும் பகுத்தறிவுக் கருத்துக்கள் இடம்பெற வேண்டு மென்பதை வலியுறுத்திப் பேசினார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

அன்புடையீர் !

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் 20—2—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, கோவை நகரையடுத்துள்ள பேரூர் துளுவ வேளாளர் அற நிலையத்தில் நடைபெறும்.

அதுபோது பொதுக் குழு உறுப்பினர்கள் அனை வரும் வருகை தந்து, நடவடிக்கைகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஆய்வுக்கு வருபவை :

1. நாடகத் தடைச் சட்டம்
2. மாநில மாநாடு

அன்பன்,

‘ அறிவகம்’
இராயபுரம், சென்னை-13
9—2—’55

சி. என். அண்ணுதுரை,
பொதுச்செயலாளர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கோவையில் தி. மு. க. பொதுக் கூட்டம்

20-2-55 மாலை 6 மணிக்கு, கோவை, சிதம்பரம் பூங்கா வில், தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணு துரை, தோழர்கள் சம்பத், நெடுஞ்செழியன், மதியழகன், என். வி. நடராசன், கருணு நிதி, ஆசைத்தம்பி, எம். எஸ். இராமசாமி, தங்கப்பழம், அன் பில் தருமலிங்கம், மதுரை முத்து, அப்பாவு, ஏ. கோவிந்த சாமி, எம்.எல்.ஏ., பொன்னம் பலனர், ஏ. எல். சி. கிருஷ்ண சாமி, தில்லை வில்லாளன், சி. பி. சிற்றரசு, கண்ண தாசன், அரங்கண்ணல், இளம் வழுதி, இளங்கோ, தோழியர் கள் அருண்மொழி, சத்திய வாணிமுத்து, மற்றும் பலர் பேசுவர்.

20-2-55 காலை 7 மணிக்கு, கோவை இரயில் நிலையத்தில் தலைவர்களுக்கு வரவேற்பு ஊர் வலம் நடைபெறும்.

கோவை நகர தி. மு. க. சிறப்புக் கூட்டம்

19-2-55 மாலை 6½ மணிக்கு, கோவை, வைசியாள் வீதி, குமரவேல் ரைஸ் மில் (தர்ம ராஜா கோவில் அருகில்) கோவை நகர தி. மு. கழகச் சிறப்புக் கூட்டம் தோழர் அ. பொன்னம்பலனர் தலைமை யில் நடைபெறும். பொதுச் செயலாளர் அண்ணுதுரை, தோழர் ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசுவர்.

நன்கோடை அணு 4

‘ எனக்கு எழுதவே தெரியாது !’

நீதிமன்றத்தில் நடிகர் இராதா

நடிகத் தோழர் எம். ஆர். இராதா, கோவை கோர்ட்டில், வழக் கொன்றில் சாட்சியமளிக்கையில் தமக்கு எழுதவே தெரியாது என்று தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஆகஸ்டு திங்க ளில், கோவையில் தோழர் இரா தாவின் நாடகம் ‘ஒன்று நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டு, பின்னர் அது நடைபெறாமல் போகவே, நாடகம் ஏற்பாடு செய் திருந்தவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு சம்பந்தமாக சாட் சியம் சொல்ல வந்திருந்தபோது தான் தோழர் எம். ஆர். இராதா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோயம்புத்தூரில் தமது நாடகம் நடத்துவது சம்பந்தமாக யாருமே தம்மிடம் வந்ததில்லை என்று அவர் கூறினர்.

அப்போது வழக்கின் எதிரி யான இராமன் என்பவர், ‘தேனும் பேட்டையில் உள்ள பங்களாவில் நான் நாடகத்திற்காகப் பணம் கொடுத்தபோது, நீங்கள் அதை ‘டயரி’யில் குறித்துக்கொண்டது ஞாபகமிருக்கிறதா?’ என்று கேட்ட போது, தோழர் இராதா, ‘எனக்கு எழுதவே தெரியாதே ? அப்படி யிருக்க நான் எப்படி குறித்து வைத்துக்கொள்ள முடியும்?’ என்றார்.

ஏற்றுக்கொள்ளப்பட்டது !

நேபாளப் பிரதம மந்திரி கொய் ராலாவின் ராஜினுமாவை நேபாள மன்னர் ஏற்றுக்கொண்டுவிட்ட தாகத் தெரிகிறது.

அசாமிலுள்ள பிரம்மபுத்திரா நதிப் பள்ளத் தாக்கிலிருக்கும் நாகோர்காதியாவில், தினந்தோ றும் 500 பீப்பாய் கச்சா எண் ணெய் உற்பத்தியாகிறது.

காதலி மடிவதைக் கண்டு கோழையான காளை!

வேறு இடத்தில் தற்கொலை செய்து கொள்ள முடிவு!

பூனா, பிப். 19—

தான் காதலித்த பெண் விஷமருந்தி மடிவதைக் கண்ணுறக் கண்ட காரணத்தால், ஏற்கனவே, காதலர் இருவரும் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்திற்கிணங்க, தானும் தற்கொலை செய்துகொள்ள முடியாத ஒரு நிலையை, ஒரு வாலிபன் பெற்றுவிட்டான். வேறு ஒரு இடம் சென்று தன்னுயிரைப் போக்கிக் கொள்வதாகக் குறிப்பெழுதி பெண் சவத்தின்மீது வைத்துவிட்டு, பெண் இறந்த இடத்தைவிட்டு வெளியேறி விட்டான்!

அப்பெண்ணும், இளைஞனும் பூனாவிலிருந்து பம்பாய்க்கு வந்தனர். பெண் பத்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருப்பவள்; இளைஞன், கல்லூரியில் ஓராண்டாகப் படித்து வருபவன்.

தங்கள் மண வாழ்க்கைக்குத் தங்களுடைய பெற்றோர்களிடமிருந்து அனுமதி கிடைப்பது முடியாது என்ற நம்பிக்கையின் காரணமாகவே, காதலர் இருவரும் ஒரு தற்கொலை ஒப்பந்தம் செய்து கொண்டு, அதை வெற்றிகரமாக நிறைவேற்றவே, பம்பாய்க்கு வந்து ஒரு ஓட்டலில் தங்கினர்.

ஒப்பந்தப்படி, பெண் விஷம் அருந்தி, காதலன் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே சவமாகிவிட்டாள். இக்கோரக் காட்சி, இளைஞனின் நெஞ்சுரத்தைக் குலைத்துவிட்டது. காதலியின் சவத்தை அந்த ஓட்டல் அறையிலேயே விட்டுவிட்டு, கதவை வெளிப்பக்கம் பூட்டிக் கொண்டு வெளியேறிவிட்டான்.

குறிப்பிட்ட ஓட்டலில் நாங்கள் சவமாகக் கிடப்போம் என தன்னுடைய சுற்றத்தார் ஒருவருக்கு எழுதிய கடிதத்தைக் கண்டதும், அந்த உறவினர் மேற்படி ஓட்டலுக்கு வந்து குறிப்பிட்ட அறையின் பூட்டை உடைத்துப் பார்த்தார்.

தற்கொலை செய்து மாண்ட பெண்ணின் சவத்தையும், அதன் மீது வைக்கப்பட்டிருந்த இரண்டு கடிதங்களையும் மேற்படி உறவினர் கண்டார்.

காதலர் இருவரும் தற்கொலை செய்துகொண்டு ஒரே நேரத்தில் சாவது என இருவரும் கையொப்பமிட்டுள்ள கடிதம், அந்த இரண்டில் ஒன்றாகும். 'எங்கள் இருவரையும் கணவன்—மனைவியாகக் கொண்டு, இரு சவங்களையும் ஒன்றாக வைத்து எரிக்க வேண்டு'மென அவ்வொப்பந்தக் கடிதத்தில் கோரப்பட்டிருந்தது.

'அந்தப் பெண் சாவதைக் கண்ட நான் தற்கொலை செய்துகொள்ளும் துணிவிழந்துவிட்டேன்; நான் வேறிடம் சென்று தற்கொலை செய்து மடியப்போகிறேன்' என இளைஞன் மட்டுமே கையெழுத்து இட்டக் கடிதமாக இரண்டாவது கடிதம் இருந்தது.

பி. ஏ. மூர்த்தி வேறொருவருடன் பேசிக்கொண்டிருந்தாராம். தமக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தால், பி. ஏ. மூர்த்தி ஆத்திரம் கொண்டு டாக்டரை திட்டியதாகவும், அதைத் தொடர்ந்து இருவரிடையே பேச்சுவார்த்தைகள் முற்றி இறுதியில் டாக்டரைத் தாக்க பி. ஏ. மூர்த்தி முயற்சித்ததாகவும், இது சம்பந்தமாக டாக்டர் லாசரஸ் போலீசில் புகார் செய்யக் கிளம்புகையில் மூர்த்தி, டாக்டரைத் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

பின்னர், போலீசில் புகார் செய்யப்பட்டு, மாஜிஸ்திரேட் முன்னர் வழக்கு விசாரணை செய்யப்பட்டதாம். மாஜிஸ்திரேட், பி. ஏ. மூர்த்திக்கு ரூ. 50 அபராதம் விதித்து, அந்தப்பணத்தில் டாக்டருக்கு ரூ. 26 நஷ்டஈடு கொடுக்கும்படியும் உத்தரவிட்டாராம்.

குறிப்பு:— சில திங்கட்கு முன்னர், சென்னை நகர சபை உறுப்பினரும் 'உமா' ஆசிரியருமான ஜி. உமாபதி என்பவர், ஆசிரியர் ஒருவரை அடித்ததாகத் தொடரப்பட்ட வழக்கொன்றில் ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

சீனக் கடலில் கடற் போர்

தைப்பே, பிப். 18—

சீனக் கடலில் 'மாபெரும்' கடற்போர் நடைபெற்றதாகச் செய்திகள் கூறுகின்றன.

இதுவரையிலும் நடைபெற்ற சீன உள்நாட்டுப் போர்களில் இதுதான் மிகப் பெரிய 'கடற்போர்' என்றும், டாச்சென் தீவுகளை விட்டு சியாங் படைகள் வெளியேறிய பின் நடைபெற்ற முதல் பெரிய மோதுதல் இதுதான் என்றும் கூறப்படுகிறது.

சென்னை நகரசபை உறுப்பினருக்கு ரூ. 50 அபராதம்

கொடுத்த கடனை திருப்பிக்கேட்ட டாக்டரை தாக்கினராம்!

சென்னை, பிப். 18—

கொடுத்த கடனை திருப்பிக் கேட்ட டாக்டர் ஒருவரை, சென்னை நகரசபை உறுப்பினரான பி. ஏ. மூர்த்தி என்பவர் தாக்கினதாகத் தொடரப்பட்ட வழக்கொன்றில், அவருக்கு ரூ. 50 அபராதம் விதித்து மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார்.

நகரசபை உறுப்பினரான பி. ஏ. மூர்த்தி, சென்னை புதுப்பேட்டை, திருவேங்கட முதலி தெருவில் வசிக்கிறார். அவருக்கு பக்கத்து வீட்டில்தான் ராஜு லாசரஸ் என்ற அந்த மருத்துவர் வசிக்கிறார்.

முன்னர் ஒரு தடவை தம்மிடமிருந்து பெற்ற கடன் ஐந்து ரூபாயையும் திருப்பித் தரும்படி டாக்டர் லாசரஸ், பி. ஏ. மூர்த்தியைக் கேட்டாராம். அந்த நேரத்தில்,

கழகக் கூட்டம்

★

திருச்செங்கோடு
40-கால் மண்டபத்தின்முன்
21—2—55 மாலை 6-மணிக்கு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
சிற்றுளி-சுப்பிரமணியம்

தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

20—2—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு சேலம் டவுன், நெ. 2, வன்னியகுல சத்திரியர் தெருவில் (சின்னக் கடைவீதிக்கருகில்) தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டம், தோழர் பி. எம். கோபால் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், ஏ. மாரியப்பன், எஸ். ஏ. அன்புக்கரசு ஆகியோர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

20—2—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு சோடம்பாக்கம், 63-பி, ஆர்க்காட்டுச் சாலை கழகக் கொட்டகையில், 35-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் செ. கிருட்டினமூர்த்தி தலைமையில் நடைபெறும். "ஆவடி காங்கிரசும் தி. மு. கழகமும்" என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

20—2—55 ஞாயிறு காலை 9-மணிக்கு 44-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (எண் 2, அரங்கநாதபுரம் தெரு, மயிலாப்பூர்) தோழர் சி. குப்புசாமி தலைமையில் "நாடும்-ஏடும்" என்னும் பொருள் பற்றிப் பல தோழர்கள் பேசுவார்கள்.

ஈ. வெ. கி. சம்பத் நிகழ்ச்சிகள்

★

பிப். 21: மாலை 5 மணி—மேட்டுப் பாளையம்
" மாலை 7 மணி—புஞ்சை புளியம்பட்டி
பிப். 22: மாலை 6 மணி—குமார பாளையம்
பிப். 23: மாலை 6 மணி—சல்லிப் பட்டி (உடுமலை வட்டம்)
பிப். 24: மாலை 6 மணி—மூலனூர் (தாராபுரம் வட்டம்)

இலவச நிலம் வழங்குவதற்கான கம்யூனிஸ்டு கட்சி மசோதா தோல்வி

'இராமமூர்த்திக்கு விவசாய அனுபவம் இல்லை'யென்று நிதி மந்திரி கருத்து

சென்னை, பிப். 17—

'சென்னை மாநிலத்தில் உள்ள சாகுபடிக்கு ஏற்ற எல்லா தரிசு நிலங்களையும், நிலமில்லாதவர்களுக்கும், சிறிது நிலமுள்ளவர்களுக்கும் இலவசமாக பிரித்துக் கொடுக்க வேண்டும்," என்று கூறும் மசோதா ஒன்றை தோழர் பி. ராமமூர்த்தி சார்பில், தோழர் மணலி கந்தசாமி சட்டசபையில் பிரரேபித்தார்.

ஒவ்வொரு தாலுக்காவிலும் தாசில்தார், அப்பகுதி எம் எல். ஏ., மாவட்டக் கழக உறுப்பினர் ஆகியவர்களைக் கொண்ட கமிட்டி நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதைச் செய்யவேண்டும் என்றும், நிலம் தரப்படுவதில் அரிசனங்களுக்கு முதலிடமும், நிலமில்லாதோருக்கு அடுத்த இடமும் தர வேண்டும் என்றும் கூறப்பட்டது.

சென்னை மாநிலத்தில் மொத்தம் ஒரு கோடியே 5 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய புறம்போக்கு நிலமிருப்பதாக முன்னாள் முதன் மந்திரி ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் கொடுத்துள்ள அறிக்கையில் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

பலர் மசோதாவை ஆதரித்தும் எதிர்த்தும் பேசினார்கள்.

விவாதத்திற்குப் பதிலளித்து சர்க்கார் தரப்பில் நிதி மந்திரி சுப்பிரமணியம் பேசுகையில், கம்யூனிஸ்டுகள் மீது பலத்த கண்டனங்களை ஏவியுள்ளார்.

தரிசு நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதில் பல சிக்கல்கள் இருப்பதாகவும், எல்லா இடங்களிலும் சமுகமாக நிலப் பிரிவினையைச் செய்துவிட முடியாதென்றும் கூறியிருக்கிறார்.

மேலும், சர்க்காரும் நாட்டில் உள்ள நிலப் பிரச்சினைக்கு சீக்கிரமே பரிகாரம் காணவிரும்புவதாயும் தெரிவித்திருக்கிறார். ஆந்திரவில் நிர்வாகத்திலிருக்கும், சிக்கல்களை நீக்கி உள்ள 50,000 ஏகரில், 12,000 ஏகர் பிரித்துக் கொடுக்கப்பட்டதாயும், மார்ச்சு முடிவுக்குள் மொத்தம் 30,000 ஏகராவையும் விநியோகித்துவிட இருப்பதாகவும் மந்திரி தெரிவித்துள்ளார்.

தரிசு நிலத்தை உத்தரவு மூலமே பிரித்துத் தரமுடியுமென்றும், ஆயினும் அவசியமேற்பட்டால் சட்டம் கொண்டுவரவும் சர்க்கார் தயங்கமாட்டார்கள் என்றும் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

நிலப் பிரிவினை விஷயத்தில் உள்ள பெரும் சிக்கல்களை உணர்ந்து கொள்ளாமல் மசோதா பிரரேபிக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார் மந்திரி.

"விவசாய அனுபவம் இல்லாத பி. ராமமூர்த்தி இம்மசோதா கொண்டுவந்ததால்தான் மசோதா இப்படி உள்ளது போலும்! ஒரு வேளை மணலி கந்தசாமியே மசோதா கொண்டுவந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்," என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருப்பதாயும் மந்திரி தெரிவித்தார்.

பால் உணவு உற்பத்தி

நீலகிரி மாவட்டத்தில் டின்பால் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாக மந்திரி எம். பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

நல்லெண்ணம்தானோ?

நாட்டு மருத்துவம் நாட்டுப் புறங்களில் கிடைப்பது மிகச் சுலபமாயிருப்பதோடு, அதற்கு நல்ல பெயரும் இருந்து வருவதால் தான் அதை மேலும் வளப்படுத்த சர்க்கார் முயலுவதாக மேல்சபை கேள்வி நேரத்தில், 'மேனாட்டு சிகிச்சை முறை தாராளமாகக் கிடைக்கும்போது நாட்டு மருத்துவத்தை வளர்க்க சர்க்கார் முன்வர வேண்டிய காரணம் என்ன?' என்று கஜபதி நாயகர் கேட்ட கேள்விக்கு மந்திரி மாணிக்கவேலர் பதிலளிக்கும்போது கூறினார்.

மேலும், நாட்டு மருத்துவம் குறைந்த செலவிலேயே கிடைப்பது மட்டுமல்லாமல், அதனால் கிடைக்கும் பலனும் நல்லதாகவே இருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

இவை தவிர, எல்லா நாட்டுப்புற இடங்களுக்கும் போவதற்கு போதுமான அளவு மேனாட்டு முறை மருத்துவம் பயின்ற மருத்துவர்கள் இல்லை என்றும், எல்லா நோய்களுக்கும் நாட்டு மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்க முடியுமா என்பது தெரியாவிட்டாலும் எந்த மருத்துவ முறைகளாலும் எல்லா நோய்களையுமே தீர்த்துவிட முடியாதென்றும் அவர் கூறினார்.

"போதிய 'தூண்டுதல்' இல்லாததால்தான் நவீன (மேனாட்டு) மருத்துவ முறை தேறியவர்கள் கிராமங்களுக்குப் போவதில்லை அல்லவா?" என்று டாக்டர் சீனிவாசன் கேட்டதற்கு, அமைச்சர் பதிலளிக்காமல், 'அது தனிக் கேள்வியாகும்,' என்றார்.

சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம்

16—2—55 புதன் மாலை 6 மணிக்கு, சென்னை மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், இராயபுரம் 'அறிவகத்'தில் தோழர் கே. எம் கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் கே. ஆர். ராமசாமி அவர்களின் தாயார், தோழர் கண்ணதாசன் அவர்களின் தந்தையார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்ட பின்னர், 1955ம் ஆண்டு திராவிடர் திருநாள் வரவு-செலவு கணக்குகள் சிறிது நேர விவாதத்திற்குப் பின்னர் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மாவட்டக் கழகத்தின் நிதி நிலையைச் சரிசெய்வதற்கு சிறப்புச் சொற்பொழிவுகளின் மூலம் நிதி திரட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

குடும்பத் தலைவியின் மறதியைப் போக்க!

தேவைகளைத் தெரிவிக்கும் விளம்பரப் பலகை

'என் நீல சட்டையில் அறுந்துபோன ஒரு பொத்தானைத் தைக்கவும்'; 'இடந் தவறி வைத்துவிட்ட பாட புத்தகத்தைத் தேடி எடுக்கவும்'; 'இரவு உணவுக்கு தயிர் தேவை'; 'கட்டுரை ஒன்று எழுத குறிப்புகள் தேவை'!

இவ்வாறு, எழுதப்பட்ட விளம்பரப் பலகை ஒன்று, அகமதாபாத் சமூக ஊழியர் ஒருவர் வீட்டில் தொங்கவிடப்பட்டிருக்கிறது.

தங்களுடைய அன்றாடத்தேவைகளை குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வாய் மூலமாகக் கூறினால், அவைகளை குடும்பத் தலைவி மறந்துவிடுவதற்கு இடமிருக்கிறது என்பதற்காக, இந்த விளம்பரப் பலகை ஏற்பாடு எனக் கூறப்படுகிறது.

அம்மா 'நான் இதைச் செய்யுங்கள் எனக் கேட்டேன்; ஆனால் நீயோ மறந்துவிட்டேன் என அடிக்கடி கூறுகிறீர்கள்!' என்ற குறைபாட்டை தன் காதல் மைந்தனிடமிருந்து அக்குடும்பத் தலைவி அடிக்கடி கேட்டு வந்தாளாம்.

இந்த மறதியிலிருந்து தப்பவும், குடும்பத்திலுள்ளவர்கள் விருப்பத்தைத் தாமதமின்றி நிறைவேற்றவும், இப்பொழுது அவ்வீட்டில் ஒரு கரும்பலகையும், எழுதுகுச்சியும் சுவரில் தொங்கவிடப்பட்டிருக்கிறதாம்!

சிறு தொழில்கள் அபிவிருத்தி

'மாதிரி' தொழிற்சாலைகள் அமைக்கப்படும்?

கல்கத்தா, பிப். 19—

பல்வேறு துறைகளில் நவீன ஆயுதங்கள், வேலை முறைகளைப் புகுத்துவதற்காக மாதிரி தொழிற்சாலைகளை மத்திய சர்க்கார் ஏற்படுத்த வேண்டுமென்று இந்திய சர்க்காரின் சிறு தொழில்களுக்கான குழு, சிபாரிசு ஒன்று செய்திருக்கிறது.

தொழிற்சாலை ஒவ்வொன்றும் அதனதன் தேவைகளுக்குத் தகுந்தபடி அமைக்கப்பட மாநில சர்க்கார்கள் திட்டங்கள் தயாரிக்குமென்றும், தச்சு வேலை, இரும்பு வேலை, மண் பாண்டங்கள் தயார் செய்தல், தோல்சமான்கள் தயாரித்தல் போன்ற தொழில்களுக்கென அந்த 'மாதிரி' தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் அச்சிபாரிசில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னை சட்ட (மேல்) சபையில்

நெய்வேலி நிலக்கரி

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி தோண்டுவதற்கு இயந்திர சாதனங்கள் வாங்குவதற்காக சென்னை மாநில அரசாங்கம் இதுவரை ரூ. 40 70 லட்சம் செலவிட்டிருப்பதாக சென்னை மேல்சபையில் மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

இந்திய அரசாங்கம் சில இயந்திரங்களைத் தந்து உதவியதாகவும், ஆனாலும் செலவை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

எனினும் ஜனவரி 1-ந் தேதி முதல் இந்திய சர்க்கார் முழுப்

கல்வி கண்காட்சி

20—2—55 காலை 10½ மணியளவில், சென்னை—முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியின் கல்வி கண்காட்சி, டாக்டர் எஸ். ஜி. மணவாளராமானுஜம், அவர்களால் திறந்து வைக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் ஜூபிடர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.